
www.tamilarangam.net

# முகுந்தனின் மூளைக் கோளாறு



ச. அ. டேவிட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முகுந்தனின் மூளைக் கோளாறு

தமிழ் ஈழ மக்கள்விடுதலைக் கழகம் ''கழக அமைப்பை இறுக்கமாக்கும் நிலையில் சந்தர்ப்பவாத பிற்போக்கு சக்திகளின் வெளியேற்றம் தவிர்க்க முடியாததே'' என்ற தலைப்பில் ஓர் கீழ்த்தர, அபாண்ட பொய் பிரச்சார கைநூலை வெளியிட்டு கழகத்தை கட்டியெழுப்பிய முன்னணி அங்கத்தவர்களுக்கு களங்கமேற்படுத்தும் சதி செயலில் இறங்கியிருக்கின்றது.

இக் கைநூலில் உள்ள என்னைப் பற்றிய தனிப்பட்ட குறிப்புகளுக்குப் பதில் கொடுப்பது என் கடமை. முகுந்தனின் குற்றச்சாட்டுக்களை ஒவ்வொன்றாய் எடுத்து என் பதில்களைத் தருகிறேன்.

1. ''எமது போராளிகளால் மீட்கப்பட்டார்''

மட்டகளப்பு சிறையுடைப்பு ஓர் கூட்டு முயற்சி என்பதை நான் என்றும் வற்புறுத்தி வருகிறேன். இச்சம்பவத்துக்குத் தலைமை வகித்தவன் என்ற முறையில் உண்மையைக் கூற எனக்கு உரிமையுண்டு. தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் அன்று தொட்டு இன்று வரை தாம் தனிப்பட்ட முறையில் சிறையுடைப்பைச் சாதித்ததாய்ப் பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

www.tamilarangam.net



சிறையுடைப்புக்கு வெளி வேலைக்குக் கழக சார்பில் வாசுதேவா பொறுப்பேற்றிருந்தார். சிறையுடைப்பின் முதல் நாள் தம்மால் சிறையுடைப்பில் பங்கு கொள்ள முடியாது என்று கூறி விட்டார். உள்வேலைக்கு பொறுப்பாயிருந்த ராஜன் மிகவும் கோபப்பட்டு வாசுவைக் கண்டித்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை என்னிடம் கூறியிருந்தார். சம்பவ இரவு வாசுதேவா சிறைப்பக்கமேயில்லை. இக்காலத்தில் வாசுதேவா மட்டக்களப்பில் சத்தியா கிரகம், கடையடைப்பு, குண்டு வீச்சு முதலிய குழப்பங்களில் ஈடுபட்டு அரசாங்க காவல் படையினரையும் இராணுவத்தினரையும் மட்டக்களப்பில் குவித்து வைக்க சந்தர்ப்பம் கொடுத்தார். இதனுல் சிறையுடைப்பை கூடிய சீக்கிரத்தில் செய்து முடிக்க முயற்சித்த போராளிகள் (இராசன் உட்பட) மிகவும் கோபமும் குழப்பமும் அடைந்தனர்.

நான் சிறையிலிருந்து தனித்தே வீதிக்கு வந்தேன். கழக அங்கத்தவர் எவரும் என்னுடன் இல்லை. என்னைச் சிறையில் கண்டிருந்த சாதாரண கைதிகளாகிய இரு இளைஞர்கள் என்னை பாதுகாத்து மீட்டனர். அடுத்து இரண்டு வாரங்களுக்கு என் நண்பர்களே என்னை ஒளித்து வைத்திருந்தனர்.

அதன் பின் வாசுதேவா என்னைத் தேடிப் பிடித்து ஒரு கிழமை பாதுகாத்தார். அதன் பின் கழகத்துக்காக உயிர் கொடுத்த அஞ்சா நெஞ்சன் ஜெயசந்திரன் என் காவலை பொறுப்பெடுத்து என்னை இந்தியாவுக்குக் கப்பலில் அனுப்பும் வரை கண்ணும் கருத்துமாய் இயங்கியதற்கு இங்கு என் நன்றியைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்று கழகம் எனக்குச் செய்திருக்கும் சதிச் செயலின் பின்னணியில் பார்க்கும் போது கழகம் என்னைப் பாவித்து தம்மை வளர்த்துக் கொள்ளவே என்னை தேடிப் பிடித்தனர் என்று கணிப்பதற்கு இடமுண்டு. இதற்கு ஆதாரங்கள் பின் கூறப்படும்.



நிலைமை இப்படியிருக்க முகுந்தன் கழகப் போராளிகள் என்னை மீட்டனர் என்பது அவருடைய சந்தர்ப்பவாதத்திற்கு சிறந்த அறிகுறி.

2. ''இவரைக் கழகத்தில் அனைவரும் மதிப்புடன் நடத்துவது வழக்கம்''. இது முழு உண்மை. இன்றும் கழகத்தில் எனக்கு மதிப்பு உண்டு என்பது என் துணிவு. ஆனால் ''அனைத்து அடக்கு முறைகளையும் உடைத்தெறிய'' உருவாக்கப்பட்ட கழகம் இன்று அடக்கு முறையின் முழு உருவமாய் மாறியிருக்கின்றது. முகுந்தன் தன்னைச் சுற்றி உளவாளிகளையும், கொலையாளிகளையும் சித்திரவதை நிபுணர்களையும் வைத்து கழக அங்கத்தவர்களை அடக்கி ஆளுகிறார். ஆகையால் கழகத்தினருக்கு என் மேல் உள்ள மதிப்பை வெளிப்படுத்த எவ்வித சந்தர்ப்பமும் இல்லை.

3. ''தோழர்கள் மத்தியில் தீவிர இனவாததத்தைத் தூண்டி விட்டார். அனைத்து சிங்களவர்களையும் கொலை செய்து சிங்கள இனத்தை அடையாளமே இல்லாமல் அழிக்க வேண்டும் என பேசியுள்ளார்''

இதுவும் உண்மை. 1956-ல் நடந்த இனக்கலவரத்தின் பின் நான் இக்கொள்கையில் உறுதி கொண்டிருந்தேன். கடந்த 29 ஆண்டுகள் நடந்த பயங்கர நிகழ்ச்சிகள் எனது குறிக்கோள் அநீதியல்ல என்பதை நிரூபிக்கிறது. சிங்கள இனத்தை அழிப்பதற்காக அல்ல தமிழினத்தைக் காப்பாற்றவே இக்கொள்கை அவசியமென உணர்கிறேன். முகுந்தன் அரசியல் நுட்ப வியாக்கியானத்தால் சிங்கள மக்கள் எல்லோரும் குற்றமற்றவர்களென வாதிக்கலாம். ஆனால் படுகொலைகளுக்கெதிராக சிங்கள இனத்தில் எவராவது தமிழ் எதிர் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது மறுக்க முடியாதது. சமீப காலத்தில் முகுந்தன் சிங்களவர்களில் பலர் தம்மை ஆதரிப்பதாகக் கூறியிருப்பது இவருடைய மடமைத் தனத்தின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளிப்பாடு. இலங்கையில் நடப்பது இனப்போர் அல்லவென்றும் அதிராயவாதமே அடிப்படைக் காரணமென்றும் முகுந்தன் கூறியிருப்பது அவருடைய மூளைக் கோளாறுகளை வெளிப்படுத்துகிறது.

இங்கு முகுந்தன் என்னுடைய பிரதான கருத்தொன்றை மறைத்து விட்டார். ஏனெனில் இதை வெளியிட்டிருந்தால் அவருடைய போலித் தலைமை அம்பலமாகி விடும். நான் இந்தியாவுக்கு வந்த நாட் தொடக்கம் 1000 போராளிகளுடன் 6 மாத காலத்துக்குள் கழகம் நேரடிப் போராட்டத்தில் இறங்க வேண்டும் என்பதை வற்புறுத்தி வந்தேன். போராளிகளில் பெரும்பாலானோர் இதை உற்சாகமாக வரவேற்றனர். இன்று 18 மாதங்களின் பின் போர்க்களத்தில் இறங்க முடியாத நிலையை இலங்கை அரசாங்கம் உருவாக்கியுள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் இணைந்து தமிழ் ஈழத்துக்கு அப்பால்பட்ட பேச்சு வார்த்தையில் இறங்கவும் முகுந்தன் தயாராகிறார். அது மட்டுமல்ல எவ்வித இனத்துக்கும் சேராத சேர்லி கந்தப்பாவின் அறிவுரையில் அகப்பட்டு இப்போ இலங்கையின் இனப் போர் இல்லை என்றும் பகிரங்க அறிக்கை விடுகிறார். இன்னும் 18 மாதங்களில் இப்போ நடப்பது ஈழப்போரல்ல உலக யுத்தம் என்று அறிக்கை விட்டு களத்தில் இறங்குவதை காலவரையின்றி பிற்போடவும் கூடும். முகுந்தன் நடத்துவது விடுதலைப் போரல்ல. விடுதலை வியாபாரமே. உலகளாவிய ரீதியில் வியாபாரம் நடத்தி பணம் சேகரித்து எவ்வித கணக்கும் கட்டுப்பாடும் இல்லாமல் தன்னிச்சையால் சர்வாதிகார வாழ்வில் மூழ்கிக் கிடக்கிறார். களத்தில் இறங்காது காலம் கழித்தால் கஸ்டமிருக்காது.

4. ''இவரது தவறான போக்கினால் எமது ஆங்கில வெளியீடான Plot Bullet...in ஒரு முறை தீயிட்டுக் கொழுத்த வேண்டியேற்பட்டது''



இந்நிகழ்ச்சி முகுந்தனின் அற்பத்தனத்திற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. மேற்கூறிய வெளியீட்டில் பனாகொடை மகேஸ்வரனைப் பாராட்டி கட்டுரை எழுதி இருந்தேன் அக்கட்டுரையை இக்கைநூலுடன் இணைத்திருக்கிறேன். இக்கட்டுரையால் பனாகொடை மகேஸ்வரனின் வீரத்தை மெச்சுவதும் அவரை தமிழ் ஈழ போராட்டத்திற்கு ஊக்குவிப்பதும் என் நோக்கம். ஆனால் முகுந்தனின் பொறாமை மனத்திற்கு புண் மேல் புளி போலாயிற்று. 2000 பிரதிகளையும் தீயிட உத்திரவிட்டார். ஆனால் அதில் ஒரு பிரதியை நான் வைத்திருந்தேன். வாசகர்கள் அதைப் படித்து முகுந்தனின் மனோ நிலையைக் கணிக்கலாம்.

5. ''டேவிட்டின் செய்கைகளை ஆதரித்து நின்றவர் சந்ததியார்''

இதைவிடச் சிறப்பான சிபார்சை முகுந்தன் சந்ததியாருக்கு என்றும் கொடுக்க முடியாது. சந்ததியாருக்கும் முகுந்தனுக்கும் உள்ள விவேகத்தையும் மனப்பான்மையையும் இக் குறிப்பு வெளிப்படுத்துகிறது. முகுந்தன் மாற்றானை தன் முன்னேற்றத்திற்குப் பாவிப்பார். பழத்தையுண்டு பின் சக்கைபோல் வீசி விடுவார். ஆனால் சந்ததியார் கொள்கைக்காகவும், நன்றிக் கடனுக்காகவும் வாழ்பவர். என்னுடைய ஆற்றலையும் நான் கழகத்திற்கு ஆற்றிய பணியின் மதிப்பையும் உணர்ந்து நடப்பவர். ஆனால் முகுந்தன் இவ்வித பண்பாடுகளுக்கு அப்பாற்பட்டு தன் தலைமைக்காகவே வாழ்பவர். மனிதரை மதித்து நடக்கத் தெரியாதவர்.

6. ''இவ்வாறு தனிமனிதர்களைப் புகழ்வதிலும், ஆதரிப்பதிலும் முழுகவனம் செலுத்தியவர்கள்தான் இன்று கட்சி ஜனநாயகம், பொதுவுடமைத் தத்துவங்கள் பற்றி பீற்றித் திரிகின்றனர்''

www.tamilarangam.net



இது நான் பனாகொடை மகேஸ்வரனைப்பற்றி எழுதிய கட்டுரையை மேற்கொண்டு எழுதப்பட்டது. முகுந்தனின் அப்பட்டமான தர்க்கவாதம் இங்கு வெளிப்படையாகிறது. ஒரு தனிமனிதனின் சிறப்பை புகழ்ந்தால் அவனை ஆதரிப்பது என்பது கருத்தா? தனி மனிதனைப் புகழ்வது பொதுவுடமைக்கு முரண்பட்டதா? இந்த அடிப்படையில் வானொலியிலும், கட்டுரைகளிலும், மேடைகளிலும் முகுந்தன் புகழ்பாடும் அவருடைய கூலிப்படையின் நிலை என்ன? முகுந்தனின் மூளை கோளாறை இங்கு தெளிவாய்க் காணலாம். தன்னைப் பற்றிப் புகழ்வது வரவேற்கத்தக்கது. மாற்றானைப் புகழ்வது தவிர்க்கப்பட வேண்டியது. இதுவே இவரின் வாழ்க்கை இலட்சியம்.

7\. ''ஜே.ஆர். ஜெயவர்த்தனாவைப்பற்றிக் கீழ்த்தரமான முறையில் விமர்சனம் செய்தார். இஸ்லாமிய மக்களைப் புண்படுத்தும் விதத்தில் வானொலியில் பேச்சு அமர்ந்திருந்தது.''

இக் குறிப்பு முகுந்தனின் மடமைத்தனத்தை அம்பலமாக்குகிறது. நான் வானொலியில் கூறியது பின்வருமாறு: ''ஜெயவர்த்தனா கேரள முஸ்லீம் இனத்தவர்க்கும் சிங்கள இனத்தவர்களுக்கும் கலப்பு மணத்தில் தோன்றியவர். இது சரித்திர உண்மை. முஸ்லீம் மக்களுக்கும் தனிச் சிறப்புகளுண்டு அதேபோல் சிங்களவர்களுக்கும் சிறப்புகளுண்டு. ஆனால்கலப்பட ஜெயவர்த்தனாவுக்கு எவ்வித பண்பாடுகளுமில்லை.'' முஸ்லீம் மக்களும் முகுந்தனைப்போல் மடையராய் இருந்தால் என்கருத்து நுட்பத்தைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். முஸ்லீம் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் வழிகாட்டியாக நிற்க கனவுகாணும் முகுந்தனுக்கு என் குறிப்பின் உண்மையை புரிந்து கொள்வது கடினம். ஜெயவர்த்தனாவின் அசுரக்குணங்களை விளங்க இவ் உள்வியல் குறிப்பு அத்தியாவசியம்.



ஆனால் முகுந்தனுக்கு இது விளங்காமல் இருக்கலாம். முகுந்தனுக்கும், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துக்கும், ஜெயவரத்தனாவுக்கும் பல கோணங்களில் ஒற்றுமையிருப்பதை ஆழ்ந்து அவதானித்தால் வெளிப்படையாகும்.

8\. ''இது மட்டுமல்ல எமது கழகத்தால் இரகசியமாக தயாரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த இராணுவ வரைபடம் ஒன்றை இவராலேயே பலமுறை சி.ஐ.ஏ. என அடையாளம் காட்டப்பட்ட திரு. சந்திரகாசனுக்கு இரகசியமான முறையில் கொண்டு போய்க் கொடுத்தார்.''

இக் குறிப்பில் முகுந்தனின் முழு நச்சுத்தனமும், பொய்யும், புரளியும், மூடத்தனமும் தாண்டவமாடுகிறது. இந்த நிகழ்ச்சியை அடுத்து நான் கழகத்திலிருந்து வெளியேற வேண்டியவனாயினும் என் நண்பர்களுக்காகத்தான் இந்த கீழ்த்தர செயலையும் பொறுத்திருந்தேன். வரைபடப் பகுதியில் நான் பல பட்டங்களை பெற்றவன். 40 வருட அனுபவமும் உள்ளவன். இராணுவப் படத்திற்கும் சாதாரண படத்திற்கும் உள்ள வித்தியாசத்தை கணிக்கக்கூடியவன் ஆனால் தற்பெருமையில் மதிமயங்கிக் கிடக்கும் நில அளவையாளர் முகுந்தனுக்கு சாதாரண படமும் இராணுவப் படமாய்த் தோன்றலாம் இதே பாணியில் சமீபகாலத்தில் முழு உலகமே காணாத இராணுவ தந்திரத்தை முகுந்தன் கையாளவிருக்கிறார் என்ற செய்தியும் கழக மடல்களில் வந்திருக்கின்றன. இதுவும் என்னிடம் காட்டிய இராணுவ படம்போல் இருந்தால் தமிழினத்திற்கு அதோகதிதான். சிறுமையைப் பெருமையாக்கி தமிழ் மக்களை ஏமாற்றுவதில் முகுந்தன் ஒரு தனிச்சிறப்பை பெற்றிருக்கிறார். திரு. சந்திரகாசனை சி.ஐ.ஏ. ஏவலாளி என்ற கருத்துப்பட நான் எழுதியது உண்மை. அதை எழுதப்பயந்து என்னை எழுதும்படி முகுந்தனும் அவருடைய அந்தரங்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருபர் சேர்லீ கந்தப்பாவும் கேட்டதும் உண்மை. ஆனால் நான் என்னுடைய தனிப்பட்ட கோபதாபங்களுக்காக தமிழினத்தின் நன்மையை என்றாவது கெடுக்கமாட்டேன். சந்திரகாசனின் பொறியியலாளர் என்னைத் திருகோணமலை மாதிரி வரைபடம் தரக்கோரினார். அதை நான் கழக அலுவலகத்திலிருந்த சாதாரண வரைபடத்தின்மேல் அலுவலகத்தில் எல்லோர் முன்னும் வைத்தே வரைந்தேன் இதில் இரகசியம் எதுவும் இருக்கவில்லை. ஆனால் சந்தர்ப்ப தினத்தன்று இப்படத்தை எடுத்து வரும்படி நான் மெய்க்காப்பாளரை அனுப்பியபோது முகுந்தன் அவரிடம் இருந்த படத்தை எடுத்துக்கொண்டு படம் கொடுக்க முடியாது என்று சொல்லியனுப்பினார். முகுந்தனின் சிறுமைத்தனத்தின் ஆழத்தை நான் அன்று உணர்ந்தேன். ஓர் அரைகுறை நிலஅளவுகாரன் எனக்கு வரைபட இலக்கணம் புகட்ட முற்பட்டது அவருடைய இறுமாப்பையும், பண்பாட்டின்மையையும் நன்குணர்த்துகிறது. நான் சந்திரகாசனுக்கு கொடுத்த திருகோணமலைப்படத்திலும் பன்மடங்கு உபயோகமுள்ள ஆகாய நிழல் படங்கள் அமெரிக்காவிடம் உள்ளது என்பதை முகுந்தன் தன் சிறுமைத்தனத்தில் மறந்துவிட்டார். தற்பெருமையிலும், புகழிலும் மாண்டவர் கதி மிகவும் பரிதாபத்திற்குரியது. இந் நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து முன்நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளை ஆராய்ந்தால் முகுந்தனுக்கு என்மேல் எவ்வித நல்லெண்ணமும் இருந்திருக்க முடியாது, என்னைத் தன்வளர்ச்சிக்கு ஒரு பகடைக்காயாய் பாவித்தே வந்திருக்கின்றார் என்பது வெளிப்படையாகிறது.

1983 மார்கழியில் முகுந்தன் என்னை மொரிசஸ் தீவுக்கு அழைத்துச் சென்றார். இதையும் அங்கிருந்த ரூபா 1,37,000 யும் காந்தியம் பேரில் தான் பெற்றுக் கொள்ளச் செய்த சூழ்ச்சி என்பதை உணர்ந்து மனம் வருந்துகிறேன். காந்தீயம் பெயரைச் சொல்லி வளர்ந்து முகுந்தன் இன்று கொலை, சித்திரவதை, போன்ற அக்கிரமங்களுக்கு சக்கரவர்த்தியாய் திகழ்வதைக் கண்டு கண்கலங்குகிறேன்.



காந்தீய அமைப்புச் செயலாளர் டாக்டர் இராசசுந்தரம் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்துடன் உள்ள தொடர்புகளால் சிறைப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, உயிர் நீத்தார். தெய்வாதீனமாய் நான் உயிர் தப்பிக் கழகத்துக்கு முழுமூச்சாய்ப் பணியாற்றினேன். நான் கனவு கண்ட பரிதாபிமானமும் சனநாயகமும், கழகத்தில் மறுக்கப்பட்டதால் வெளியேறினேன். என் உயிர் உடலில் இருக்கும்வரை இக் கொள்கைகளுக்காகப் போராடுவேன்.

பல இளையர்கள் கழகத்துக்காகத் தம் உயிரைக் கொடுத்துவிட்டனர். பல நூற்றுக்கணக்கான கழகத்தினர் சிங்கள வெஞ்சிறையில் வாடிவதங்குகின்றனர். முகுந்தன் வெரட்டு வாதங்கள் பேசிக்கொண்டு விடுதலைக் களத்தில் இணங்காமல் பேச்சுவார்த்தைகளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் கபட நாடகம் ஆடுகிறார். பொய்ப் பிரசாரத்தால் தன் தலைமையைப் பாதுகாக்க முயற்சிக்கிறார். தமிழினம் இவரின் போலிவேடத்தை விரைவில் உணர்வார்கள்.

www.tamilarangam.net

## 'PANAGODA' MAHESWRAN, A NEW BREED OF TAMILS

Tamil society in Sri Lanka, before the arrival of the Europeans may in terms of modern scientific, knowledge and technology he termed more brain. With the arrival of the Europeans and specially after the introduction of English education Sri Lankan Tamil Society turns to be more brain than brawn. Countless numbers of educated specially professionaly qualified were churned out and nearly all educated turned out to be physical cowards. Now in the generation of 'Panagoda' Maheswaran 'a happy median of brain and brawn seems to be taking shape in Sri Lanka Tamil Society.

'Panagoda' Maheswaran was born into a rich family from pungudutivu in Jaffna district which owned many shops and houses in Colombo. In 1977 and 1983 Singhala thugs demolished and set on fire the properties of the Family, may be worth around Rs. 5,000, 000/- but then Panagoda Maheswaran has taken nearly Rs.40,000,000/- from Singhala Banks in Sri Lanka. Thats not a bad deal !



'Panagoda' Maheswaran was in the final year of the Mechanical Engineers Course in St. Marys College, London when the call of the spirit of Eelam came to him. With a total abandon reminscent of Bibilical exhautation he gave up everything and returned to Sri Lanka and took up the Gun.

In this first act of complete surrender and dedication to the cause of Eelam 'Pangaoda' Maheswaran was expertly guided and instructed by 'Oberoi' Devan. I remember the fateful day when the news of the murder of Devan r e a c h e d the Jail. 'Panagoda' Maheswaran could neither eat, nor talk for days after the incident. What hurt him most was that a brave warrior who spent every cent he earned at the 'Oberoi' Hotel for the liberation of Eelam should he called a common thief and shot to death by Tamils. A truly bright star in the Eelam sky, had vanished for ever.

Having received the first revolver from 'Oberoi' Devan 'Panagoda' Maheswaran had assembled four youths, instructed them on the finer points of Bank robbery and tried to break the Bank at Kuchiveli. The attempt failed; all were arrested and detained and tortured. A week before I was taken to Panagoda Army Camp 'Panagoda' Maheswaran had made good his escape from the maximum security camp of the Singhala Army where nearly a battalion of singhala soldiors were keeping 35 Tamil freedom fighters in detention and torturing them.

'Panagoda' Maheswaran had arranged for a hacksaw blade and celo tape to be sent along with food parcels to the Camp. Food parcels were allowed not because the

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Singhala soldiers liked the Tamil detainees but they loved the delicacies from Tamil homes more. He had sawn away the bars on the window of the cell and kept them in position with celo tape and abided his time for escape. One afternoon when the soldiers on duty were fast as sleep after a hearty meal 'Panagada' Maheswaran undid the celo tape and having made sure the sentry duty was looking away from his side slipped down into the open field adjacent to the detention barracks. When the sentry with gun on the ready turned and looked at him he had the cold nerve and presence of mind to pretend he was a soldier off duty. To make it doubly sure he plucked a mango and sat under the tree and ate it. The soldiers were satisfied beyond any douts. Now he walked straight towards the barracks of the soldiers. Once round the corner of the barracks he walked faster in search of the high walls of the camp. Who will run a maximum security camp without high walls? Maheswaran was mistaken. There are no high wall at Panagoda. Now the Singhalese are building a high wall at Homagama Camp. He met some people digging a well. He joined them and inspected the well; told them a few things on how best it can be done. Having made sure no suspicion was raised he cooly walked to the railway station close by.

He studied the faces of the people around and once sure beyond any doubt that he had spotted some Tamils apporoached them and asked them for five rupess to buy a ticket to Colombo. They were Indian Tamil labours and did not have any money. He took courage and told them he was a Tamil escaping from Jail. They went around and brought two rupees. He took the first bus to Kelaniya a



town North of Colombo, Knowing Colombu transport centres will be checked. In Kalaniya he made the first mistake. He took refuse in a house and being worn-out took time off to rest and sleep News got around there was a stranger in the area and he was arrested by the Police. 'Panagoda' Maheswaran was brought back to Pangagoda Army Camp two days after I was taken there. It was carnival time in the Camp. Army top brass in cap and medals, Ministers, Seceretries and in the rush Government Favourite journalists and Camera Men came to see Maheswaran. For nearly a week Panagoda Maheswaran was the centre of attraction. As they went past many will stop to stare at us. Once again I must admit 'Pangoda, Maheswaran was not attacked by the soldiers although the rest of us were subjected to torture every other day after his arrest. For the rest of the period. we were at the Camp Maheswaran was almost an honoured guest. One could feel there was sense of admiration for him.

After nearly two months we were all taken to welikade Jail. There we had opporunity to talk and 'Panagoda' Maheswaran related to me his past life and his hopes for the future. It is strange, yet true that in many fields we saw eye to eye. 'Panagoda' Maheswaran was actually resigning himself to a long term of imprisonment partly due to his attempted escape from Jail. But even after 7 years he was determined to strike back at the Singhala Racists.

On July 27, 1983 hell was let loose on the Tamil freedom fighters at welikade. Close associates of

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'Panagoda' Mahehwaran fought tooth and nail. His forehead, hands, and legs were cut. He managed to survive.

Here I must digress to say a few words about Sarveswaran the right hand man of Maheswaran. A more charming young man both physically and mentally is hard to find in all this wide world. Even the hardcore Singhala Army personnel at Panagoda could not escape his charms. Invarially he will be selected everyday to distribute tea brushes, broom and cloth for regular clearing of the Cells. He will run around from cell to cell with a cherubic smile on his face and by the time his duty was over he would have passed all relevent information to all of us. It was a treat to greet him in the mornings. He is no more. His soul cries to hige heavens for vengence. And I am sure 'Panagoda' Maheswaran is hearing it.

There were many more, may be not connected to Panagoda Maheswaran on whom books could be writen. True and dedicated souls for the freedom of Tamil Eelam, who are now no more. I hope at leat to put on record for posterity, that part of their life which I was previledged to share with them at Panagoda and Welikade.

'Panagoda' Maheswaran was brought to Batticaloa Jail with us. He worked for our escape. He had only 10 to 12 youths with him but all the while I got the impression they were as powerful as a squadron of soldiers, He sent out messages and organised them to perfection. There is no doubt his men played a leading role in the glorious Jailbreak at Batticaloa. But unlike many others he did not make wild claims for himself and his men.

Once out of Jail many of us were making frantic attempts to get away with our lives 'Panagoda' Maheswaran was calmlly, with the same cold calculated Manner in which he picked and ate a mango at Panagoda, planning to rop Singhala State Banks.

Like Robert Bruce of Scotland 'panagoda' Maheswaran succeeded beyond all expectations to collect nearly Rs.40,000,000/- from Banks at Velanai and Kathankudy.


At Panagoda I have overheard Maheswaran telling Commander Udugampola that once he was a free man he would like to set up a garage and a Factory. I can't help imagining that with Rs.40,000,000/- with him 'Panagoda' Maheswaran is setting up a Factory to produce the fastest gun on earth to win freedom for his people. I only know he has the brain and brawn to do it. The Tamils of Sri Lanka need a few thousands like him at this tragic hour.

*S.A. DAVID*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முகுந்தனின் சூழ்க் கோளாறு



ச. அ. டேவிட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்